**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 09/2014**

**Deposition of Witness for : PW31**

**Name** : டாக்டர்.திரு. முபின்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 2673 of the day of 15-07-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது தானிப்பாடி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.01.2009 மேற்படி மருத்துவமனையில் நான் பணியிலிருந்தபோது தண்டராமபட்டு தாலுக்கா வட்டாட்சியர் அவர்கள் கிரேடு 1 பிசி முனிசாமி என்பவரிடம் கொடுத்தனுப்பிய கடித எண் வி1/ 211/2019 குற்றஎண். 30/2009 u/s/ 302, 328 and TNP Act வழக்கில்இறந்துபோன சேட்டு என்கிற கோபால் வயது 45 த.பெ. குப்புசாமி என்பவரின் பிரேதத்தை மோத்தக்கல் சுடுகாட்டில் புதைத்துள்ளதாகவும், அதை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்யவேண்டுமாய் கோரப்பட்டிருந்தது. அதன்படி நான் தாசில்தார் தண்டராம்பட்டு தானிப்பாடி எஸ்ஐ., மோத்தக்கல் விஏஓ அவர்கள் முன்னிலையில் 02.30 மணிக்கு மோத்தக்கல் கிராமத்தில் உள்ள சுடுகாட்டில் அந்த பிரேதத்தை அவரின் மனைவி பச்சையம்மாள் முன்னிலையில் தோண்டி எடுத்து 03.15 மணிக்கு பிரேத பரிசோதனை என்னால் ஆரம்பிக்கப்பட்டது. பிரேதத்தை பார்க்கும்போது உடல் முழுவதும் வீங்கிக்காணப்பட்டது. தோலின் மீது சிறுசிறு கொப்புளங்கள் காணப்பட்டது. ஒருசில இடங்களில தோல்பிய்ந்து போய் காணப்பட்டது. அவர் தலையில் இருந்து முடிகள் கழன்றிருந்தது. பற்கள் வெளியே தள்ளப்பட்டிருந்தது.நாக்கு வெளியே தள்ளப்பட்டிருந்தது. முழு உடலும் அழுகிய நிலையில் இருந்தது. நெஞ்சுப்பகுதியில் கூராய்வு செய்ததில் எந்த எலும்புமுறிவு காணப்படவில்லை. மேற்பகுதியிலும் சிராய்ப்பு காயமோ கன்றிய காயாமோ காணப்படவில்லை. நுரையீரல் கலங்கியிருந்தது. இதயத்தில் புது இரத்தம் காணப்படவில்லை. வயிற்றை கூராய்வு செய்து பார்த்ததில் வயிறு, கல்லீரல், மண்ணீரல் அனைத்தும் கலங்கிய நிலையில் இருந்தது. சிறுநீரகம், உடல் உறுப்புகள் அனைத்தும் கலங்கிய நிலையில் இருந்தது. மண்டை ஓட்டை கூறாய்வு செய்ததில் வெளிக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை. எலும்பு முறிவும் இல்லை. மூளை கூழ்மநிலையில் இருந்தது. கழுத்தை கூறாய்வு செய்ததில் நாவடி எலும்புகள் நல்லநிலையில் காணப்பட்டன. இரசாயன பரிசோதனைக்காக

உள்ளூறுப்புகளை அனுப்பிவைத்தேன். உடற்கூறாய்வு மாலை 05.00 மணிக்கு முடிந்தது. இரசயனப் பரிசோதனை அறிக்கை வேலூாரிலிருந்து 04.02.2009 அன்று கிடைக்கப்பெற்றது. அதில் அனைத்து உள்ளூறுப்புகளிலும் எத்தில் ஆல்கஹால் 774 மி.கிராம் கண்டறியப்பட்டது. மெத்தில் ஆல்கஹால் 10 முதல் 93 மி.கிராம் வரை இருந்தது. மேலும் மோனாகுரோட்டோபாஸ்ட் காணப்பட்டது. அது பூச்சிக்கொல்லி மருந்து. செ்னனை தடவியல் ஆய்வு நிலையமும் இதனை உறுதி செய்துள்ளது. மனித உடலுக்கு 400 மி.கி எத்தில் ஆல்கஹ ால் அதிகபட்ச போதையை ஏற்படுத்தும் அதற்கு மேல் இருந்தால் மரணம் ஏற்பட வாய்ப்புண்டு. அதற்கு மேல் அதில் மோனாகுரோட்டோபாஸ்ட் கலந்திருப்பதால் இது விசச்சாரயம் என்று கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய பிரேதவிசாரணை அறிக்கை **அ.சா.ஆ. 27** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தாாகள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் வேலூாருக்கு உடல் உறுப்புகளை அனுப்பினேன். அங்கிருந்து விஷமில்லை என்று அறிக்கை வந்துள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சென்னைக்கு பகுப்பாய்வு அறிக்கையை அனுப்பவில்லை. எத்தில் ஆல்கஹால் 774 மி.கிராம மரணம் விளைவிக்கக்கூடியது. மோனாகுரோட்டோபாஸ்ட் விஷம இல்லை என்று வேலூர் ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதிகப்பட்ட விஷம் சாப்பிட்டு இருந்தால் ஈரலில் காணப்படும் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் 3 நாட்கள் கழித்து பிணம் தோண்டப்பட்டுள்ளது. அதனால் உள்ளூறுப்புகள் பற்றி தெளிவாக சொல்லமுடியாது. விஷமாக இருந்தால் தொண்டை, நாக்கு கருத்து காணப்படும் என்று சொன்னால் இறந்தவுடன் 24 மணிநேரத்தில் கூறாய்வு செய்தால் அதனை சரியாக கண்டறிய முடியும். இரத்தம மற்றும் சிறுநீரில் விஷம் கண்டறிய முடியும் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் கண்டறிய முடியாது. பிணம் அழுகிய நிலையில் இருந்ததால் வேறு வகையிலும் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்றால் என்னுடைய கருத்தின் படி எத்தில் ஆல்கஹ ாலே விஷத்தன்மை வாய்ந்ததுதான்.

ஒம்/- முபின்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.